# 2019-2020

**உலக முதியோர் தினம்**

**அக்டோபர் 01,2019** அன்று **ஸ்ரீ ராமகிருஷ்ணா விருதாஸ்ரமத்தில்** முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. முதியோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாணவர்கள் **பாட்டு, நடனம்** என பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். மேலும் **ASF சிலம்பாட்ட பயிற்சி மையமும்** எங்களோடு இணைந்து சிலம்பாட்ட நிகழ்வினை வழங்கியது.




**லஞ்ச ஒழிப்பு தினம்**

**2019 அக்டோபர் 28 முதல் நவம்பர் 2** வரை **"லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு"** **வாரமாக** நடுவண் அரசு அறிவித்துள்ளது. இதனையொட்டி **கோவை மண்டல** தொழிலாளர் வருங்கால வைப்புநிதி **நிறுவனத்துடன் (EPFO)** நமது கல்லூரியின் தன்னம்பிக்கை மன்றம் இணைந்து **31.10.2019** துறைகளுக்கு இடையேயான பேச்சு, கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளை நடத்தியது.



**இந்திய அரசியலமைப்பு நாள்**

2019 நவம்பர் 26 அன்று 70ம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நாளினை (National Constitution Day) முன்னிட்டு நமது கல்லூரியின் தன்னம்பிக்கை மன்றம் 04.12.2019 அன்று துறைகளுக்கு இடையேயான வினாடி – வினா போட்டியை நடத்தியது.



**உலக தன்னம்பிக்கை தினம்**

**ஜனவரி 2, 2019** அன்று உலக தன்னம்பிக்கை தினமாகக் கொண்டாடப்படுகிறது. அந்நாளினை சிறப்பிக்கும் விதமாக தன்னம்பிக்கை வார்த்தைகள் அடங்கிய அட்டைகளை கல்லூரியிலுள்ள அனைத்து பேராசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் வழங்கினோம்.






**தன்னம்பிக்கைப் பயிலரங்கு TALENTINA’2020**

பிப்ரவரி **03.02.2020** அன்று தன்னம்பிக்கை மன்றத்தின் சார்பாக **TALENTINA’2020** எனும் **பயிலரங்கு** நடைபெற்றது. கோவை மாநகரைச் சார்ந்த பல கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். பயிலரங்க சிறப்பு விருந்தினர்களாக **திரு.ப.பிரேம்குமார் பிரேம்ஸ் கீரவண்டி எனும் நிறுவனத் தலைவர், திரு.பா.இராஜேஷ் நடிகர், நக்கலட்ஸ், திரு.தினேஷ் மாணிக்கம்; நோ புட் வேஸ்ட் எனும் நிறுவன இணைத்தலைவர்** ஆகியோர் கலந்து கொண்டனர். மூவரும் மாணவப் பருவத்திலிருந்தே தனக்கென ஒரு பாதையை வடிவமைத்துக் கொண்டு அதன்வழி பல

வெற்றிகளைப் பெற்று தடைக்கற்களை தகர்த்தெறிந்தவர்கள். பல்வேறு நிலைகளில் பயணிக்கும் இவர்கள் தங்களது அனுபவத்தோடு தற்போதுள்ள உலகம் எதை எதிர்பார்க்கிறது. எந்த வழி சென்றால் நாம் நம் இலட்சியத்தை அடையலாம் என்பது குறித்து உரையாற்றினார்கள். இதனால் மாணவர்கள் அனைவரும் தன்னம்பிக்கை அடைந்தோடு தனக்கென ஒரு பாதையை வகுக்கும் வழியையும் கற்றுக்கொண்டனர்.



